# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2018 சனவரி

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**மேலோட்டமான பார்வை:**

இவ்வினாப்பத்திரம் 100 புள்ளிகளுக்காக மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

(1) பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. **– ஒவ்வொன்றிற்கும் 05 புள்ளிகள்**

(2) பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. **– ஒவ்வொன்றிற்கும் 10 புள்ளிகள்**

(3) பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களை உள்ளடக் கியுள்ளது.**– ஒவ்வொன்றிற்கும் 25 புள்ளிகள்**.

**பொதுவான கருத்துக்கள்:**

இவ்வினாப்பத்திரத்திற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை நியாயமானளவு திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு திருப்திகர மானளவு புள்ளிகளை விசேடமாக வினா இல. 08 மற்றும் 09 இற்குப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், இலக்கம் 01 தொடக்கம் 04 வரையான வினாக்களுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறான விடை அளித்திருந்தமை அல்லது விடையளிக்க முயற்சிக்காமை அவதானிக்கப்பட்டது. இதற்கான பிரதான காரணமாக இருப்பது அந்த எல்லா வினாக்களும் முகாமைத்துவக் கணக்கீட்டுடன் தொடர்புடைய கோட்பாட்டுரீதியான விடயங்களை முன்னிலைப் படுத்தியிருந்ததும் அத்தகைய விடயப் பரப்புகளில் பரீட்சார்த்திகள் குறைந்தளவான அறிவைக் கொண்டிருந்தமையுமே ஆகும்.

**பகுதிரீதியான செயலாற்றுகை :**

**பகுதி A** இல், வினா இல. 03 ஐத் தவிர ஏனைய வினாக்களுக்கான செயலாற்றுகை திருப்தி கரமாக இருந்தது. வினா இலக்கம் 03 இற்கான செயலாற்றுகை கீழ்மட்டத்தில் காணப்பட்டது.

**பகுதி B** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.

**பகுதி C** இற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

## பகுதி A

### வினா இல. 01

இங்கு ‘‘ஊதிய வருமானம்’’ என்னும் பதத்தை இரண்டு உதாரணங்களுடன் விபரிக்குமாறும் ஊதிய வருமானத்தின் ஓர் அனுகூலத்தையும் ஓர் பிரதிகூலத்தையும் குறிப்பிடுமாறும் கோரப்பட்டிருந்தது.

ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மட்டுமே இவ்வினாவுக்குரிய முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் முகாமைத்துவக் கணக்கீட்டிலுள்ள ‘‘ஊதிய வருமானம்’’ என்னும் பதம் பற்றிய விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பது அவர்கள் அளித்திருந்த விடைகளிலிருந்து தெரியவருகிறது. அவர்கள் தொழில்நுட்பத் தன்மை பற்றிய எவ்வித கருத்தூன்றலுமின்றி வெறுமனே ஊதிய வருமானம் பற்றி விபரித்திருந்தனர். இந்தக் காரணத்தினால், அவர்கள் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றிக்கூட குறிப்பிட முடியாமலிருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

கோட்பாட்டு ரீதியான விடயங்கள் உட்பட பாடத்திட்டம் முழுமையையும் கற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## வினா இல. 02

இங்கு நிதிக் கண்ணோட்டத்திற்கான செயற்பாட்டு அளவிடல் முறைகளுக்கான மூன்று உதாரணங்களைக் குறிப்பிடுமாறும் சமநிலைப் புள்ளி அட்டையின் வாடிக்கையாளர் கண்ணோட்டத்திற்கான இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. விடையளிக்க முயற்சித்தவர்கள்கூட திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெறவில்லை. இவ்வாறு குறைந்த மட்டத்தில் விடையளிக்கப்பட்டிருந்தமைக்கான பிரதான காரணமாக அமைவது, வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாமையும் சமநிலைப் புள்ளி அட்டை தொடர்பான விடயங்கள் தெரிந்திருக்காமையுமேயாகும். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளிடம் ''சமநிலைப் புள்ளி அட்டை'' பற்றிய விளக்கம் காணப்படவில்லை என்பது அவர்கள் அளித்த விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்டது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

முழுமையான பாடத்திட்டத்தைப் படிப்பதுடன் கோட்பாட்டு ரீதியான பகுதிகளில் கூடிய கவனத்தைச் செலுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## வினா இல. 03

இங்கு, தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தை கணிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்ததுடன் இதேபோன்ற வினா முன்னைய பரீட்சைகளிலும் கேட்கப்பட்டிருந்தன.

வியாபாரச் சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் வினாவில் தரப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் 365 இனை 20 இனால் வகுத்து பிழையாக மீள்கணிப்பீடு செய்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தொழிற்படு மூலதன சுற்றுக்காலத்தை 5 + 8 - 20 = -7 நாட்கள் என்றவாறு பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர். மேலும், தொழிற்படு மூலதன சுற்றுக்காலத்தை கணிப்பிடுவதில் வியாபாரச் சென்மதிகள் காலத்தைச் சேர்த்திருந்த சில பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் கீழ்மட்டத்தில் காணப்பட்டது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- விடையெழுதத் தொடங்குவதற்கு முன் வினாவைச் சரியாக வாசிக்கவும்.
- இதே போன்ற கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- கையெழுத்தினை மேம்படுத்தவும்.

## வினா இல. 04

இங்கு, தரப்பட்ட முதலீட்டுச் செயற்றிட்டத்தின் காசுப் பாய்வுகளை அடையாளம் காணுமாறும் செயற்றிட்டத்தின் மீள்செலுத்துகைக் காலத்தைக் கணிப்பிடுமாறும் கோரப்பட்டது.

இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த பரீட்சார்த்திகளால் பகுதி (a) இற்கான புள்ளிகளை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் கீழ்மட்டத்தில் காணப்பட்டது.

சில பரீட்சார்த்திகள் ஒடிவுப் பெறுமதியைக் கருத்திற்கொள்ளாது இயந்திரத்தின் தேய்மானத்தை பிழையாகக் கணித்திருந்தனர். மேலும், அவர்கள் ஒடிவுப் பெறுமதியினை 4 ஆண்டுகளிலான ஓர் காசுப் பாய்வாகக் காட்டியிருக்கவில்லை. சிறிய தொகையான பரீட்சார்த்திகள் மீள்செலுத்துகைக் காலத்தைக் கணிப்பிடுவதற்கு கழிப்பனவு செய்யப்பட்ட CFs இனை கணிப்பிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- இதேபோன்ற கடந்தகால வினாக்களில் பயிற்சிபெறுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## பகுதி B

### வினா இல. 05

இங்கு அடுத்த ஆண்டிற்கான மூன்றடக்கு பாதீடொன்றினைத் தயாரிக்குமாறு கோரப்பட்டது.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கவில்லை என்பதுடன் இந்த வினாவுக்கான புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. இது ஒரு மிகவும் இலகுவான வினாவாகும். இங்கு பெரும்பாலும், மிகச் சாத்தியமான மற்றும் மோசமானளவு சாத்தியமான போன்ற மூன்று அடுக்குகள் / நிலைமைகளுக்கான ஒரு பாதீடு தேவைப்படுத்தப்பட்டிருந்தது. மாறுகின்ற வீதங்கள் இவ்வினாவில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் அவற்றைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. விசேடமாக பல பரீட்சார்த்திகள் பொருளாதார நிலைமை பற்றித் தெளிவாக விளங்கிக்கொள்ளவில்லை. உதாரணமாக, பணவீக்க வீதம் அதிகரிக்கும்போது, விலையும்கூட அதிகரிக்கும், இது மோசமான பொருளாதார நிலைமையை உண்டுபண்ணும். மறுதலையாகக் கூறுவதாயின், பணவீக்க வீதம் குறைவடையும்போது விலையும் குறைவடைந்து சிறந்த பொருளாதார நிலைமையினை உருவாக்கும்.

பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்களவு உயர்ந்த வீதமானது சிறந்த தெரிவாக இருப்பது இங்கு அவதானிக்கப்பட்ட பொதுவான தவறாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் செய்முறைகளைச் சரியாகக் காட்டியிருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

- கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் பயிற்சிபெறுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.
- செய்முறைகள் சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

### வினா இல. 06

இங்கு வரையறைக் காரணிகளை இனங்காணுமாறும், கிடைக்கப்பெறும் வளங்களின் அடிப்படையில் உத்தம உற்பத்திக் கலவையைக் கணிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளிக்கவில்லை என்பதுடன் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் வரையறைக் காரணிகளை இனங்காண்பதற்குத் தேவையான கணிப்பீடுகளைச் செய்யமுடியவில்லை. சிறிதளவான பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளைச் சரியாகச் செய்திருந்தனராயினும் அதனைக் கூலி மணித்தியாலங்களாகக் குறிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். சிறு தொகையான பரீட்சார்த்திகள் வரையறைக் காரணிகளை இனங்காண்பதற்காக Linear Programming முறையினைப் பிரயோகித்திருந்தனர். மேலும், அவர்கள் வரையறைக் காரணி ஒன்றிற்கான பங்களிப்பினைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. .

**பரீட்சகரின் பரிந்துரை:**

கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் பயிற்சிபெறுமாறு பரிந்துரைக் கப்படுகிறது.

## வினா இல. 07

இங்கு, NPV கணிப்பீட்டைக் கொண்டு, புதிய எந்திரத்தில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறினை மதிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது.

பெரும்பாலானவர்களால் தவறான விடை அளிக்கப்பட்ட வினா இதுவாகும். சிலர் அடைப்புக் குறிகளைப் பயன்படுத்தி காசு வெளிப்பாய்வு ஒன்றாக ஆரம்ப முதலீட்டைக் காட்டியிருக்க வில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் 5 ஆவது ஆண்டிற்கான மூலதனப் படியினையும் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பிழையாக, NPV இன் கணிப்பீட்டில் மூலதனப் படியினைக் கருத்திற்கொண்டிருந்தனர். அத்துடன் கணக்கீட்டு இலாபத்தை காசு உட்பாய்வாக எடுத்திருந்த பரீட்சார்த்திகளும் இருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரை :**

கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் பயிற்சிபெறுமாறு பரிந்துரைக் கப்படுகிறது.

## பகுதி C

## வினா இல. 08

**(A)** கணிப்பீடுகளை ஆதாரமாகக் கொண்டு, தரப்பட்டுள்ள கம்பனி கட்டளையை ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது இல்லையா என்பதைக் காரணங்களுடன் மதிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. இவ்வினா தொடர்புக் கிரயங்கள் / தொடர்பற்ற கிரயங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பெரும்பாலும் தொடர்புடைய சகல செலவுகளையும் சரியாக இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், பின்வரும் தவறுகள் அவதானிக்கப் பட்டிருந்தன.

- தொடர்புடைய கிரயங்களை மாத்திரம் கருத்திற்கொண்டதுடன் வடிவமைப்புக் கிரயம், மேற்பார்வையாளர் கிரயம், மாதாந்தக் கூலிக் கிரயம் போன்ற தொடர்பற்ற கிரயங்களை எழுதியிருக்கவோ / குறிப்பிட்டிருக்கவோ இல்லை.
- இலாப அணுகுமுறையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக பங்களிப்பு அணுகுமுறைக்கு இணங்க கணிப்பீட்டை மேற்கொண்டிருந்தனர்.

**(B)** இங்கு தீர்மான மர வரைபினை வரைந்து தரப்பட்ட தீர்மானத்தை மதிப்பிடுமாறு கோரப்பட்டது. வினாவின் இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருக்கவில்லை. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் நியாயமானளவு புள்ளிகளையும் அவர்களால் பெற முடிந்திருந்தது. அவதானிக்கப்பட்ட பொதுவான தவறாகக் காணப்படுவது, விளம்பரக் கிரயத்தையும்கூட தீர்மான மர வரைபில் காட்டியிருந்தமை ஆகும்.

**பரீட்சகரின் பரிந்துரை :**

கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் பயிற்சிபெறுமாறு பரிந்துரைக் கப்படுகிறது.

## வினா இல. 09

### பகுதி (A)

இவ்வினாவானது நியமக் கிரயமிடல் முரண்கள், உண்மையான பங்களிப்பு மற்றும் மூலதனக் கிரயம் ஆகியவற்றுடன் பாதிடப்பட்ட பங்களிப்பை கணக்கிணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரித்தல் போன்றவற்றின் மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர் ஆயினும் அவர்களால் வினாவின் பகுதி A(a) மற்றும் பகுதி B(b) ஆகியவற்றுக்கு மாத்திரமே திருப்திகரமான மட்டத்தில் விடையளிக்கக்கூடியதாக இருந்தது. பகுதி A(b) மற்றும் பகுதி B(a) ஆகியவற்றிற்கு திருப்திகரமான செயலாற்றுகை காணப்படாமைக்கான காரணம், தொழிற் பாட்டுக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் மூலதனக் கிரயத்தைக் கணிப்பிடல் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவினைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்காமையே ஆகும்.

**பகுதி (A) இற்கு அளிக்கப்பட்டிருந்த விடைகளை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் தவறுகள் அவதானிக்கப்பட்டன :**

- பெரும்பாலான பரீட்சார்த்திகள் விற்பனைக் கனவளவு எல்லை முரணைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் விற்பனைக் கனவளவு எல்லை முரணைக் கணிப்பிடுவதற்குப் பதிலாக விற்பனைக் கனவளவு முரணைக் கணிப்பிட்டிருந்தனர்.
- கணிப்பிடப்பட்ட முரணானது சாதகமானதா (A) அல்லது பாதகமானதா (F) என்பது இனங்காணப்படவில்லை.
- தொழிற்பாட்டுக் கூற்றுக்குப் பதிலாக நெகிழ்வுப் பாதீடு (flexible budget) தயாரிக்கப்படல்

### பகுதி (B)

பகுதி (B) இற்கான விடைகளை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் தவறுகள் அவதானிக் கப்பட்டன.

- மூலதனக் கிரயத்துடன் தொடர்புடைய சூத்திரத்தை எழுதும்போது + அல்லது – போன்ற கணிதரீதியான வழுக்கள்
- சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயத்தைக் கணிப்பிடுகையில் சூத்திரத்திற்கான வளர்ச்சிக் காரணி % ஐ கருத்திற் கொள்ளாமை
- மூலதனக் கிரயத்தை கணிப்பிடும்போது % குறியீட்டைப் பயன்படுத்தவில்லை.
- நிரற்படுத்தப்பட்ட தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடுகையில் IRR நுட்பத்தைச் சரியாக பயன்படுத்தவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பாடத்தின் கோட்பாடுகளையும் சூத்திரங்களையும் கற்கவும். வெறுமனே சூத்திரத்தினை மட்டும் மனதில் இருத்திக்கொள்வது போதுமானதாக அமையாது. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு சூத்திரத்தின் பின்னாலுமுள்ள காரணங்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.
- விடைகளைப் பெறும்போது சம்பந்தப்பட்ட படிநிலைகள் மற்றும் செய்முறைகளைக் காட்டுவது எப்பவும் அவசியமானதாகும்.
- எண்கணித வழுக்களைத் தவிர்ப்பதற்கு முயற்சிப்பதுடன் விடைகளை இருமுறை பரீட்சிக்கவும்.
- சுய-கற்றல் புத்தகத்திலும் கடந்தகால வினாப்பத்திரங்களிலும் காணப்படும் வினாக்களைச் செய்துபார்த்துப் பயிற்சி பெறவும்.

\- - -

## <u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>

1. பாடத்திட்டத்திலுள்ள முழுமையான உள்ளடக்கத்தையும் பூரணமாகப் படிப்பதுடன் ஒவ்வொரு அலகிலும் அல்லது பரப்பிலும் எதிர்பார்க்கப்படுகின்ற அறிவு மட்டம் பற்றிய ஆழமான புரிந்துணர்வினை விருத்தி செய்யவும்.

2. பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாகப் பல தடவைகள் வாசிக்க வேண்டும் என்பதுடன் கணிப்பீடுகளுடன் தொடர்புடைய சகல செய்முறைகளையும் தெளிவாகக் காட்டுதலும் வேண்டும்.

3. வினாக்களுக்கு விடைளிக்கும்போது அதனுடன் தொடர்புடையதாக ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றினைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

4. கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்படுதல் வேண்டும். விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்கள் போன்றவற்றை மீளவும் பரிசோதித்தல் முக்கியமானதாகும்.

5. வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

6. கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் போன்றவற்றைக் கூர்மைப் படுத்துவதற்கு உதவி புரியும். உண்மையான பரீட்சை வினாத்தாள்களில் அதே மாதிரியான வினாக்கள் மீளவும் வழங்கப்படலாம் என்பதால் இது எப்பொழுதும் அனுகூலமானதாக இருக்கும்.

7. **சுய கற்றல் புத்தகத்தைப்** படிப்பது அவசியமானது என்பதுடன் **சுய கற்றல் புத்தகத் திலுள்ள** உதாரணங்களைச் செய்துபார்த்து பயிற்சி பெறுவதும் முக்கியமானதாகும்.

8. பாடத்துடன் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் படிப்பதுடன் சம்பந்தப்பட்ட பாடப் பரப்புடன் தொடர்புடைய ஏனைய வாசிப்புப் புத்தகங் களையும் படித்தல் வேண்டும்.

9. நேர முகாமைத்துவமானது பரீட்சையின்போது மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவதானிப்பதன் மூலம் விடையளிப்பதற்காக ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கக்கூடிய நேரத்தினைப் பரீட்சார்த்திகள் மதிப்பிட முடியும்.

10. நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடைவதற்கான திடத்துடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -